அமிர்தவசனி

-353- தெய்வீக மாதப்பத்திரிகை

— page - 353.

மலர் 2 இதழ் 9	விக்ருதி ௵ மார்கழி மீ டிசம்பர்—ஜனவரி—1951 ௵	விலை அணா 2½

ACC. No. 18580.



வீரபாகுதேவர் முருகக்கடவுள் அருளிய செய்தியைச் சூரபத்மனிடம் தூது சொல்வது

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—19)

354

பொருளடக்கம்

			பக்கம்
1.	வேகக்காரன்	(திருப்புகழ்மணி)	... 1
2.	கன்	(வி ஆர் ஜீ)	... 6
3.	ஆறுமுகமான பொருள்	(சே. ந. இராமலிங்கம் பிள்ளை)	... 10
4.	திருக்கழுக்குன்றத்தின் மாட்சி	(இளவழகனர்)	... 15
5.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 23
6.	பழநியாண்டவர் மயில்விடு தூது	(T. H. விவேகானந்தம் பிள்ளை)	... 31
7.	மூவகை நஷ்டம்		... 35
8.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்		... 36
9.	The Holy Quest	(Thiruppugal Mani)	... 39

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரை௴ முதல் பங்குனி௴ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

Sole Distributors of :—EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ மார்கழி மீ டிசம்பர் 1950—ஜனவரி 1951	இதழ் 9

வேகக்காரன்

(திருப்புகழ்மணி)

"வேகமடக்கியே விளங்கும் மெய்ஞ்ஞானிக்கு
யோகந்தான் ஏதுக்கடி குதம்பாய்
யோகந்தான் ஏதுக்கடி"

இவ்வாறு உபதேசித்தார் குதம்பை சித்தர். ஆற்றலின் ஆர்வமே வேகம். மலையிலிருந்து ஒரு பெரிய கல் உருளையை உருட்டி விட்டால், குறுக்கே அகப்பட்ட செடி, ஜீவன், பொருள் எல்லாவற்றையும் பொடியாக்கிக் கொண்டு மலையின் அடிவாரத்தில் வந்து அமரும் வரையில் அதன் அடக்கப்படாத வேகத்தைப் பார்க்கின்றோம். ப்ரேக் (Brake) இல்லாத மோட்டார் வண்டியை ஓடவிட்டு விட்டால், அதன் வேகம் ஊருக்கு ஆபத்து. அந்த வேகம் இல்லையேல் பயனற்றதாய்விடும் மோடார் வண்டி.

மெய்வீடு பரம சுகசிந்து இந்திரிய
தாப சபல மறந்து நின்கழல் பெறுவேனோ.

வெறும் பொம்மையாக அதை இழுக்க வேறு கருவிகள் தேடவேண்டி வரும். அநேக கணக்கில்லாத முறைகளில் சக்தியின் வேக ஸ்வரூபத்தை பார்க்கின்றோம். குண்டு வெடித்தது. வெடிக்கும் வேகத்தை அடக்கியாண்டு பூலோகத்தைக் கைலாசமாக்கி விடுகின்றான் மானிடன். உலகத்தில் எங்கு பார்த்தாலும் வேகந்தான் காணப்படுகின்றது. வேகமின்றி உயிரில்லை, ஸ்ருஷ்டியில்லை, ஜகத் இல்லை, அறிவு இல்லை, ஞானமில்லை. வேகமானது மானிடனுக்கு உயிர், உடல், உணர்ச்சி எல்லாவற்றையும் உண்டுபண்ணுகின்றது. கடிகாரத்தின் ஸ்ப்ரிங் (Spring) என்பதை சரியாய் முடுக்கி விட்டால் பூர்ண வேகத்தை அடைந்து விடுகின்றது. அந்த வேகத்தை அடக்கும் கருவியை எடுத்து விட்டால், ஒரு நொடியில் வேகம் வெளிப்பட்டுப் போய்விடும். பக்கத்தில் இருப்பவர் காயம் படாமல் ஜாக்ரதையாய்த்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். வேகம் என்பது சிருஷ்டியின் ஆதாரப் பண்பு. இந்த ஆதாரப்பண்பாகிய சக்தியை ஆளவேண்டுமானால் அதை அடக்கும் ஆற்றலைப் பெறவேண்டும். அதை அடக்குவதற்கு மாறுபாடான வேகம் ஒன்று வேண்டும். ஒரு வேகத்தால்தான் மற்றொரு வேகத்தை அடக்கி உலகமெனும் விந்தாடவி கட்டப்பட்டிருக்கின்றது. வேகம் உலகை அழித்து விடும். வேகத்தை வேகத்தால் அடக்கியாண்டால் விவேகத்தால் உலகம் செழித்து விடும். பாழ் செய்யும்

காலனுடல் போடத் தேடிவரு நாளிற்.
காலைமற வாமற் புகல்வேனே.

வேகத்தை அடக்கி விட்டால், வாழ் வெனும் விநோ தத்தைக் கண்டு களிக்கலாம். இந்திரியங்களின் வேகம் பாழ் செய்யும் வேகம், காமாதி ஆசைகள், ஆணவம் எனும் சுழல் இவைகளின் வேகத்தை அறிவு, ஞான மெனும் வேகத்தால் அடக்கி விடில், இன்பம் எனும் பெறு வாழ்வு பெற்று விடுவார்கள். இதை உணர்த்துகின்றார் குதம்பை சித்தர். யோக சக்தி வேண்டுவதானால் இந்திரிய வேகங்களை அடக் கவே தான் வேண்டும். இந்திரியங்கள் அடங்கப் பெற்ற யோகிக்கு யோகமென்ற மற்றொன்று வேண்டுவதோ வென்றார்.

பாழ் செய்யும் வேகத்தை அடக்கி, உயிர் வாழ்க்கையைப் பெருவாழ்வாய் நிறுவிக்க நமக்கு ஒரு வேகம் வேண்டுமே! அந்த வேகத்தை எங்கிருந்து அடைவது? யாவர் தான் கொடுப்பார் கள்? ஆண்டவன் தியானத்தால் அடக்கும் சக்தியும் அதன் வேகமும் பிறக்கும். அடக்கும் வேகத்தையே தன் உருவமாய்க் கொண்டவனுதலால் முருகனை வேகக்காரன் என்று வருணிக்கின்றார். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி யாகிய இம்மூன்றும் அடக்கும் சக்தியாக இருந்து, திகழ்ந்து, விளங்கி, அடங்காத சூரபத்மாதிகளை அடக்கி, ஒரு அசுரனை இரண்டு அமரர்களாய் ஆட்கொண்ட ரூபத்தின் தத்வத்தை வேகக்காரன் என்று போற்றினர். காலத்தை அடக்கி மயில் மேல் ஆரோகணித்தார் முருகன். இந்த்ரியங்களை அடக்கி, இச்சா சக்தியை

இறைவர் கேட் கத்த குஞ்சொல் உடையோனே
தெவியமோ கூத்தை யென்று அருள்வயே.

ஆட்கொண்டு, வள்ளிக்கு வேளைக்காரனாய்த் திகழ்ந்தார். க்ரியைகளை ஆட்கொண்டு தெய்வயானையின் பதியாய் விளங்கினார். ஆணும் சக்தி, தானேயான ஞானமாய் விளங்கினார். ஆதார சக்தியாம் தாயின் மேல் ஆசை பூண்டமைந்தனும் முருகன் ஓங்கார மயிலேறி உலகெலாம் தான் நிறைந்து எங்கெங்கு விபரீத சக்தியின் வெளியீடு தெரியப் படுமோ, ஆங்காங்கே சுற்றிச்சுற்றித் தன் வேகத்தால் சக்தியின் தீமையை அடக்கி, உலகின்கண் வேகக்காரனாய் விளங்குகின்றார். மலடியின் குரூர மனம் குழந்தையெனும் மதலையைக் கண்ட பின்பு எப்படி அன்பாய் மாறுகின்றதோ, அதேபோல் கட்டுப் படாத விபரீத ஆபத்துக்குக் காரணமாய்க் காணப் படும் பொல்லாத சக்தியை யெல்லாம் அடக்கி யாளும் முருகனும் பராசக்தி புத்திரனாய் விளங்குகின்றார். இது புத்திரசக்திதான். அடியாரிடம் ஏற்படக் கருணைவேகமேதான் — பாழான வேகத்தை அடக்கும் யோக ஞான அமுத வேகம் — இந்த வேகத்தின் உருவமே

வேளைக்காரன்—அன்பின்
வேகக்காரன்.

வேகங்கள் எல்லாம் லகான் போட்ட குதிரைகள் போல் இந்தஸ்ருஷ்டியில் ஒத்துழைப்பது ஆச்சரியத்தில் ஆச்சரியம்!

பூதமைந்து நாதமைந்து மாயை யைந்து
வேகமைந்து—வாழ்பெரும் சராசரங்கள் உறைவோனே'

நின்னை புணர்ந்துருகிப்போற் பதமக் கழல் சேர்வார்!
தம்கு மூர்த்தி வெண்ணையு மன்போடு வைக்கச் சற்றுக் கருதாதோ,

என்று திருப்புகழில் பாடியிருக்கின்றார். திருமூலர் திரு மந்திரத்தில் உபதேசிப்பார்:

"மன் மனம் எங்குண்டு வாயுவுமங்குண்டு
மன் மனம் எங்கில்லை வாயுவுமங்கில்லை
மன் மனத்துக்குள்ளே மகிழ்ந்திருப்போருக்கு
மன் மனத்துக்குள்ளே மனோலயம் ஆகும்"

வாயு என்றால் வேகந்தான். வாயுவேகம் மனோ வேகம் என்று கூறுவதன் இயல்பை உணர்த்தி விட்டார். மணிக்கு சுமார் 1000 மைல் வேகத்தில் உருண்டோடுகின்ற பூமி போன்ற கோளங்கள் எவ்வளவு முறையாய் கட்டுப்பட்டு ஓடுகின்றன! ஓடுகின்ற வேகத்தைக் காட்டிலும் அவ்வேகத்தை அடக்கியாளும் தத்வம் தான் என்னே! எல்லா வேகத்தையும் அடக்கியாண்டு மங்களத்தையும் உலகிற்களிக்கும் பொருளே முருகன் — வேலைக் காரன். அவனை நாடிய தொண்டர்களுக்கு எல்லா வேலையும் நல்லவேலையே. ஸ்கந்தன் அவதாரமாகிய ஞானசம்பந்தர் பாடியபடி,

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி சனிப்பாம்பு இரண்டுடனே
ஆசறு நல்ல நல்ல அவை
நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே"

காலவேகம், மாயைவேகம், வினைவேகம், விதியின் வேகம் இவற்றை எல்லாம் அடக்கிச் சூரனைமாற்றியவாறுபோல் கொடியனவையை இனியனவாய்ச் செய்யும், வேகக்காரனாய் அவதரித்ததும் மேதகு குறத்திதிரு வேலைக்காரனே.

மயிலேறி யன்று நொடிபோதி லண்டம் வலமாக வந்த குமரேசா
அறிவே பழுத்து அபாவாக நந்து அடியேன் மலர்ந்திட்டாமோ

கண்

வீஆர்ஜீ

கண் என்பது ஒரு முக்கியமான இந்திரியத்தைக் குறிக்கும். தவிர கண் எனும் பதம் அநேகமாக எல்லா முக்கியமான இடங்களிலும் உபயோகப்படுகிறது. நமக்கு மிக அருமையாக உள்ளவர்களை, 'என் கண்ணே!' என்கிறோம். சந்தேகமுள்ள ஒருவனைக் கண்காணிப்பில் வைக்க வேண்டும் என்கிறோம். எவனாவது தனக்குப் பிடித்தமில்லாத பேர்வழி வந்து பேசிவிட்டுப் போனபின் சில அசௌகரியங்கள் நேர்ந்தால்—"பார்த்தாயா, நான் அப்பொழுதே சந்தேகப்பட்டேன். அவன் கண்ணைப் போட்டிருப்பான். அவன் கண் பொல்லாதது," என்று சொல்கிறார்கள். மாசுள்ள மனத்தோர்கள் பார்வையால் கண் திருஷ்டி ஏற்படும் என்று சொல்வார்கள்.

கடவுளுடையவும், நல்ல சாதுக்களுடையவும் பார்வையால் தீமை நீங்கி க்ஷேமமுண்டாகுமென்பது நிதர்சனம் "ஓ, தேவியே, என்னைப் பார்க்கமாட்டாயா! உன் கடைக் கண்ணால் பார்த்தாலே என் வினைகளும் கவலைகளும் நீங்கிவிடுமே!" என பக்தர்கள் துதிப்பார்கள். 'பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ,' என்று ஒரு பழமொழியுண்டு. நகக்கண், மயில்கண் என பார்க்கும் சக்தியில்லாத நகத்திற்கும் மயில் தோகைக்கும் சொல்வதுண்டு. வெளியில் உள்ள பொருள்களைக் காணும் சக்தி படைத்துள்ளதால் கண் (புறக் கண்) எனப் பெயர் வைத்தது பொருத்தமே. மனக்கண் என்று நம் மனத்தின்

மாவைக் குத்திக் கைத்தற எற்றிப் பொரும் வேலா
பத்திப்பச் சித்த மெனக்குத் தரவேணும்.

சக்தியைக் குறிப்பிடும் வார்த்தையுண்டு. மனக் கண்ணால் பார்த்தாலல்லவா புரியும்? வெளிக் கண்களால் பார்த்தால் உண்மை புலப்படாது என்கிறார்கள். அங்கு மனக்கண் என்பது அறிவைக் குறிப்பதாகவே ஏற்படுகிறது. அகக் கண் என்பதும் மனக்கண் என்பதும் ஒன்றே.

உனக்குக் கண் இருக்கா இல்லையா? ஏன் இப்படி முட்டாள்தனமான காரியத்தைச் செய்தாய்? எனச் சொல்கிறோம். அச் சமயம் கண் என்பது புத்தியிருக்கா, இல்லையா என்பதைத்தான் குறிக்கிறது. கண் விழித்திருந்து மனம் வேறிடத்தில் இருந்தால் கண் தன் தொழிலைச் செய்வதில்லை. ஏதாவது கல்லோ, முள்ளோ காலை சரியாகத் தீண்ட ஆரம்பித்தவுடன்தான் சரியான ஞாபகம் வந்து கண் தன் வேலையைச் சரியாய்ச் செய்ய ஆரம்பிக்கிறது. கண்ணானது ஒளியினுடைய துணையைக்கொண்டே தன் தொழிலைச் செய்கிறது. வெளிச்சமில்லாவிடில் கண் விழித்திருந்தும் பயனில்லை.

எதற்காக ஒரு காரியமுமில்லாமல் இந்தக் கண்ணைப் பற்றி இவ்வளவு பிரசங்கம் சாரமில்லாமல் செய்கிறேனென்று நீங்கள் நினைக்கலாம். நினைத்தாலும் ஆச்சரியமில்லை; நியாயமே. இருந்தாலும் நான் எழுத ஆரம்பித்த காரணத்தைச் சொல்லுகிறேன். சரிதானா என சாவதானமாகப் படித்துப் பார்த்துச் சொல்லுங்கள்.

நம்மை அலங்கோலமாக ஆட்டி வைப்பதும், கண நேரமும் பிரியாத ஹித சத்ருவும், உயிர்த் தோழனுமான மனத்துக்கு, வெளியில் உல்லாசமாய் யாதொரு நிபந்தனையு

யின்றித் திரிய ஐந்து குதிரைகள் உண்டு. அவ்வைந்தில்
கண் எனும் நயனப் புரவிதான் அதற்கு ரொம்பப் பிடித்த
மானது. நினைக்குமுன் எதிர் வந்து நிற்கும், அதட்டுமுன்
வாயு வேகமாய் எத் திக்கும் சஞ்சரிக்கும். மற்ற நான்கு
குதிரைகளைவிட இதற்குத்தான் அதிக வேலை! காலையில்
துயிலெழுந்தது முதல், இரவு துயில் கொள்ளும்வரை
இதற்கு ஓய்ச்சல் ஒழிவு கிடையாது. தன் எஜமானனை
மனத்திற்கு, எது பிடிக்குமோ, அந்த இடம், அந்த திக்கு,
அந்தப் பொருளின்மேல்தான் தன் வேகத்தைச் செலுத்தி,
அவனை அங்கு கொண்டு நிறுத்தி ஆனந்தப் படுத்தும்.

குதிரை என்னமோ நல்ல ஜாதிதான்! ஆதிதேவனால்
அளிக்கப்பட்டதுதான்! நல்ல குணமுள்ளதுதான்! சுபாவ
மாகவே பரிசுத்தமானதுதான்! இருந்தும் என்ன? அதன்
எஜமானன் (மனம்) தான் அதிகப்ரசங்கியாச்சே! நல்ல
விஷயத்தையும், சாரமுள்ளதையும், கண்யமுள்ளதையும்
கனவிலும் கருதானே! அவனுக்கு, ஸ்திரமில்லாததும்,
தீமை தரக்கூடியதும், ஆபாசமானதும், அநீதியானதும்
தானே பிடிக்கும்! தனக்குக் கிடைத்த பிதிரார்ஜித
பொக்கிஷமான—இப் புனித ஜன்மமான சரீரத்தை எவ்
வளவு சீக்கிரம் அழிக்கலாமோ அவ்வளவு சீக்கிரம் திவால்
ஆக்கி ஐ. பீ. வாங்கலாமோ அந்த வழியில்தானே முழு
மோகத்துடன் இருக்கிறான்! ஆதலால், எஜமானனை எவ்
விதத்தும் திருப்திபண்ணும் ஸ்வபாவமுள்ள அந்த நயனப்
புரவியானது தன் யஜமானனை, அவனுக்குப் பிடித்த
முள்ள திக்கை நோக்கி, குஷிப்படுத்தி தன் சேவையை
செவ்வனே செய்கிறது. அதன் பலனும் கைக்கு மெய்

எழுகடல் குமுற அவுணர்களுயிரை பிரை கொளும் அயிலை யுடை
கடிக்யு ளடிகள் தருவாயே. [யோனே

யாய்க் கிடைக்கிறது ! ஒரு மனிதனுக்கு வரும் பாபத்தில் 45 பங்கு கண்ணாலும், 25 பங்கு வாயாலும், 15 பங்கு செவியாலும், 10 பங்கு மெய்யாலும், 5 பங்கு நாசியாலும் ஏற்படுகிறது.

கண்கள் இரண்டு இருக்க, முதலிலிருந்தே (கண் என்று) ஒருமைச் சொல் ஏன் உபயோகப்படுத்தினே னென்று என்மேல் விசாரணை செய்ய உங்கள் மனம் முற்படுவது சகஜம். கண்கள் இரண்டாயிருந்தாலும் இரண்டும் தனித் தனியாய் வெவ்வேறிடத்தைப் பார்க்க முடியாது. ஒரே சமயம் இரண்டும் ஒரே பொருளைத்தான் பார்க்க முடியும். ஆதலால் அதன் செயலைக் குறித்து ஒருமைப் பெயரான கண் என்று சொல்ல ஆரம்பித்தேன்.

அந்த நயனப் புரவியின் எஜமானனும், நம்மை ஆட்டி வைக்கும் சக்தியுமான இந்த மனதானது, நன்மனது வைத்தால் இந்த நயனப் புரவியைத் திருமுருகன்பால் செலுத்தி, அதாவது அவன் திருப்புகழைப் பார்த்துப் படித்தல், அவர் அடியார்களைத் தரிசித்தல், அவர் தலங்களைத் தரிசித்தல், மனக் கண்ணால் அவன் அழகிய ஆறு முகங்களையும், கருணை பொழியும் பன்னிரு விழிகளையும், அபயமளிக்கும் கரங்களையும் பவனி வரும் மயிலையும், வினையை நாசஞ்செய்யும் வேலையும், அவர் மனத்தைக் கொள்ளைகொண்ட வள்ளி தெய்வானை அம்மைகளுடன் மங்களகரமாய்க் கல்யாணக் கோலத்துடன் எதிரே அபயமளித்து நிற்பதாய்க் கண்முன் நிறுத்தித் தியானித்து அவர் சரணாவிந்தங்களில் பணிந்து சதா தியானித்தால் நமக்குக்

பரப்பிர மஞத் யுற்ற பொருள் ஓது வித்தமை அறிந்தகோவே
முத்தி பெற விடவித்து மயிலாடு சுத்தவெளி சித்தியாவோ

கிடைக்காத பொருள் உண்டோ? நாம் அடைய முடியாத பதவியுண்டோ? வினைகள் நாசமாகி நாம் பரமானந்தத்தை அநுபவிக்கலாமல்லவா? இந்த ஆறறிவுள்ள மானிட ஜன்மம் எடுத்ததன் பலன் அப்பொழுதல்லவா சித்தியா கிறது! ஆதலால், மனமே! தயவுசெய்து நான் சொல் வதைக் கேள். போன நாள் போகட்டும்; இனியாவது சதா திருமுருகன் பணிவிடை, தியானம், துதி, பஜனை இவைகளில் ஈடுபடு. சதா முருகன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிரு. அதன் பலனைக் கைமேல் காண்பாய்.

ஆறுமுகமான பொருள்

(திருப்புகழ் சதுரர் **சே. த. இராமலிங்கம் பிள்ளை,** B. A., B. T, சென்னை)

எல்லா உயிர்களையும் உய்விக்க எண்ணிய இறைவன் அருவ நிலை நீங்கிக் கருணையாலுருவங் கொள்கிறான். அந் தக் கருணையுருவமே ஆறுமுகனுை உருவமாகும். இது இறைவனால் கருணை செய்யவே உலகுய்ய எடுத்த உருவம் என்பதை

"கருணை கூர் முகங்கள் ஆறும்......கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்ற கச்சியப்ப சிவாசாரியர் திருவாக்கால் அறியலாம். இது உடல் நூலறிஞர்கட்கு ஒரு விளங்காத வியப் பாகவும் சமய நூலறிஞர்கட்குப் பெருஞ் சிந்தனை விருந் தாகவும் உள்ளது. ஆதலின், இவ் வாறுமுகமான பொருளை அறிவது அவசியமாகின்றது.

கேள்விமிக்க வேதத் தோர் துதித்த பெருமாளே
தாபமிக்க தீமைக்கு ஆவிதப்ப நேதிதாராய்.

உலகில் மக்களுடைய அறிவின் வளர்ச்சி வேறு படுதல் போல இறை வழிபாடும் அதற்கேற்ப வேறுபட்டுள்ளது. அதனால்தான் இந்துக்களிடையே பல வேறு தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன. இது நம் சமயத்திற்கு இழிவு தருவதாகாது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அறிவுடைமை ஆகும். கை, கால், மூக்கு, கண், காது முதலிய உறுப்புக்கள் வேறு வேறு அளவும், செயலும், உருவும் கொண்டிருந்தாலும், மனிதன் செயலாற்ற வேண்டுமானால் இவ் வேற்றுமைகளிலிருந்து எழும் ஒற்றுமையினாலேதான் அது கூடுமல்லவா? ஆதலால் அந்தச் சமரச தெய்வம் முருகன். அதனாலேதான் ஆறு முகங் கொண்டுள்ளான். இதைப் பின் வரும் செய்தியால் நன்கு உணரலாம்.

முருகனிடம் அன்பு கொண்ட முதியோர் ஒருவர் அப் பெருமான் சிறப்பைப் பன்னிப் பன்னிப் பல படியாக விரித்துரைத்தார். அவர் கூறி முடிக்கும் போது "ஆறுமுகத் தெய்வம் வழிபடுவோர்க்கு வேறு முகத் தெய்வம் வேண்டாமே" என்றார். உடனே சபையில் பெருங் கூச்சல் உண்டாயிற்று. "அதெப்படி?" "அதெப்படி?" என்று பலர் ஆரவாரஞ் செய்தனர். முருகனன்பர் அவர்களைக் கையமர்த்தி "அமைதியாக இருந்து கேட்டால் அனைவர்க்கும் ஐய நீங்கச் சொல்லுகிறேன்" என்றார். அமைதி நிலவிற்று. "ஐயமுள்ளவர்கள் எழுந்து அருகில் வருக" என்றனர். ஆறு பேர் முன் வந்தனர்.

முருகனன்பர் அவர்களை நோக்கி "உங்கள் மனத்தில் தோன்றிய தடையை நான் நீக்குவதற்கு முன், என்

கனக சபை மருவு கந்தப் பெருமானே
பரவு தரிசனையை யென் றெற் கருள்வாயே.

கேள்வி ஒன்றுக்கு விடை கூறுங்கள்" என்றார். அறு வரும் சம்மதித்தனர். பின், அப்பெரியார் முதலில் நின்றவனை நோக்கி "அப்பா! நீ வழிபடுந் தெய்வம் எது?" என்றார். முவலாவது ஆள்: எக் காரியத்திற்கும் முன் நிற்பவனும், முன்னே நினைக்கத் தக்கவனும், தனது அடி வழிபடுமவர்க்கிடர் கடியும் அவனும் ஆகிய கணபதியே ஆகும் "என்றான்.

பின் பெரியார், இரண்டாமவனுக்கும் அதே கேள்வி கேட்க, அவன் "கணபதி, முருகன், முதலிய எல்லாருக்கும் ஆதியாய், தோற்றக் கேடுகளற்ற தூயனாய் விளங்கும் சிவபெருமானே என் வழிபடும் தெய்வம். அக் 'கோழியைப் பாடிய வாயால் குஞ்சுவையும் நான் பாடேன்' என்றான்."

மூன்றுமவன் கூறுகையில் "ஆதி சிவனையும் ஆக்கலாதி தொழில் செய்ய அசைவிக்கும் ஆற்றலுடைய அம்மை, பராசக்தி, அம்பை, திரியம்பகியே எனது தெய்வம்" என்றான்.

நாலாமவன் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" ஆதலால் சுவரை வைத்துத்தான் பின் சித்திரம் எழுத வேண்டும். ஆதலின் இவ்வுணவின் பிண்டமாகிய உடல் உயிரோடு வாழ வகை செய்யும் காக்குந் தொழிலுடைய **நாராயணனே** நான் கண்ட தெய்வம்" என்றான்.

அதன்பின் எழுந்தான் ஐந்தாமவன். அவன் "இவர்கள் கூறியவை அனைத்தும் கண்ணுற் காணமுடியாத தெய்வங்கள், கண்ணிற் காணத்தக்க தெய்வந்தான் என் தெய்

ஆறுமுக மானநதி பாலகுரு மாதுதன மாரவினை யாடிமண மருள்
மோடனை நின் ஞான சிவமான பதமருள்வாயே. [வோனே

வம். அதனருளின்றிப் பொழுது ஒரு நாளும் புலராது. பூமியிலுயிரும் வாழாது. அதுவே சூரியநாராயணன் என்றான்.

ஆறுவதெழுந்தவன் "என்று மகலாத இளமைக்காரனும், என்று மழியாத எழிலேயுடையவனுமான முருகனே" என்றான்.

இவ்வாறு ஆறுபேறும் கூறி அமர்ந்தவுடன் முருகனன்பர் எழுந்து "இனி, நான் கூறுவதைக் கேளுங்கள். இப்போது நீங்கள் தனித்தனி வணங்கும் தெய்வமெல்லாம் ஆறு வேறு மூர்த்தங்களாகக் காணப்படினும், அவையனைத்திற்கும் மூலகாரணனாய் நின்ற மூர்த்தி ஒருவனே. கணபதியை வணங்கும் **காணபத்தியமும்**, சிவனுரை வழிபடும் **சைவமும்**, சக்தியைத் தொழும் **சாக்தேயமும்**, விஷ்ணுவைப் போற்றும் **வைணவமும்**, சூரியனைக் கும்பிடும் **சௌரவமும்**, குமரனை ஏத்தும் **கௌமாரமும்** என்ற ஆறுசமயக்கடவுளும் ஒருவனே எனக் காட்டுவதே முருகனது ஆறுமுகம் என்க '**ஆறு**', என்றது அகச்சமயம் ஆறு, புறச்சமயம் ஆறு, அகப்புறச்சமயம் ஆறு, புறப்புறச் சமயம் ஆறு என்ற இருபத்திநாலு சமயங்களையும் அடக்கியதுமாகும். அல்லது இவற்றின் விரிவாகியோ, இவற்றினின்றும் வேறுபட்டோ தோன்றும் எண்ணிறந்த சமயங்களாயினும் அவற்றிற்கும் தலைமைத் தெய்வம், தானே என்பதும் காட்டியதே 'ஆறுமுகம்', என்று அறியுங்கள். இதனால், **தெய்வம் ஒன்றேன்றிரு அது உண்டேன்றிரு'** என்ற ஆன்றோர் வாக்கும் புலனாகின்றது என்று

அருணை மீதிலே மயிலி லேறியே அழகு தாய்வரும் பெருமானே
முறமை யாகநின் அடிகள் மேவவே முனிவு தீரவந் தருள்வாயே

கூறினர். இதனைக் கேட்ட அறுவரும் ஏனை அவையினரும் "ஆறுமுகத்தெய்வந் தொழுவார்க்கு வேறுமுகத் தெய்வம் வேண்டாம்" என்ற வுண்மை உணர்ந்து மகிழ்ந்தனர்.

எனவே, தன் தெய்வம் என்தெய்வம் என்று எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடும் மதப்பூசல்களை மாற்றும் சமய சமரச தெய்வம் சண்முகனே என்றறிகிறோம்.

"ஷண்மதபதயே நமோநம: (குமாரஸ்தவம்)
'ஆறுசமயக்கடவுள்வேறு வேறின்றி யாவொருவனே
அங்கங்கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே" (சிதம்பரசுவாமிகள்)

"ஆறுசமயருந் தத்தமி லொவ்வாதங் கலைவதென்னே!
தேறுமறிவினர் எல்லாந் தெரிந்தும் தெளிந்திலரே.
பேறுதருந்தேய்வம்யாவைக்கும் யான்பெருந் தேவனென்றே
வீறு முகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே"
(சிதம்பர சுவாமிகள்)

"அறுசமயசாத்திரப் பொருளோனே,, (அருணகிரியார்)

"மாதொருதெய்வங் கொண்டோர், அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருகுவர்" (சித்தியார்)

"ஆறுமுகத்திலதிபதி நானென்றும்
கூறுசமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத்திருவம் பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின்றானே" (திருமூலர்)

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயங்கண்டு
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்
(அப்பர்)

ஆறுமுகங்காட்டும் ஏனைய தத்துவ நுபவங்களை இனி வரும் இதழ்களில் காண்போம். (தொடரும்)

அபிநவதுங்க கங்கா நதிக் குமைந்த அடியவர்க் கெளியோனே
கழலொலி தண்டையங்காலு மொக்க வந்து வரமெனக்கருள் கூர்வாய்

திருக்கழுக் குன்றத்தின் மாட்சி

இளவழகனார்

(தொடர்ச்சி 3-ஆம் பாகம்)

VII மலை

40. திருக்கழுக்குன்றம் தன் பெயருக்கேற்ப அழகிய குன்றம் அமைந்தது; மலை தனி மலையாகவும் அடுக்குகள் அமைந்த தொடர் மலையாகவும் காட்சியளித்தல் ஒரு தனிச் சிறப்பு.

41. மலை மிகச் சிறியதுமின்றி, மிக உயர்ந்ததும் மிக நீண்டதுமின்றி, அளவின் அமைந்து, ஏறவும், இறங்கவும், சுற்றவும், காணவும், கருதவும் ஏற்றதாய் எல்லாப் படியாலும் வழிபாட்டுக்கு உதவி செய்வதாய்த் திகழ்கின்றது.

42. மலை உச்சியில் அமைந்துள்ள கோவிலும், உச்சிக்கு ஏற்றதாய்ச் சிறியதும் பெரியதுமின்றி அளவில் அமைந்துள்ளது; கருவறை, இடைநிலை, பெரு மண்டபம், சுற்று மண்டபம், கொடிமரம், பலிமேடை நந்தி, அம்பலவாணர், அம்மன் திருமுன்னிலைகள், வேள்விக்கூடம், ஐந்தெழுத்துப் படி, நீராட்டு மண்டபம், வாத்திய மண்டபம், மடைப்பள்ளி, திருமுற்றம், திருக் கோபுரம், திருவிளக்கணி முதலிய கோவிலுக்குரிய அமைப்புகள் பல உச்சிக் கோவிலில் கச்சிதமாய் அமைந்துள்ளன

43. உயர்ந்த மலைச் சிகரத்தில் கோவில் அமைந்திருப்பது திறமானது. தென்னாட்டில் வேறு எங்கும் இவ்

தானவர்கள் மானவெற்றி தோளின் மிசை வாளெடுத்த பெருமானே
அடியேனை விடுதலியான வீர மயில் மீதிலுற்று வருவாயே.

வாறு இல்லை. பிற இடங்களில் கோவில், மலைச் சரிவில் இருக்கும். உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோவில் என்று சிறியதாய் ஒன்று இருக்கும். திருக் கழுக்குன்றத்தில் கோவில் ஒரே கோவிலாய் உச்சியில் உள்ளது.

44. இறைவன், தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத நிலை யினனாதலின், மலையில் மிக உயர்ந்த உச்சியில் அவன் கோவில் திகழ்தல் பொருந்தும்; திருக்கழுக்குன்றம் இதற்கு ஒரு சான்றாய் உள்ளது.

45. எல்லாம் கடந்த நிலையில் உயர்ந்து திகழ்தலாலே தான், இறைவன் 'கடவுள்' என்னும் பெயர்க்கு உரிய வனானான். திருக்கழுக்குன்றத்தில், அதிலும் கடந்த மேல் மலையுச்சியில் திகழ்பவர் கடவுளே.

"கழுக்குன்றத்துச்சியாய் கடவுளே நின்பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்" என்பது அப்பர் திருமொழி. மேலும், இறைவன் திருவடியைச் சேரும் மிக உயர்ந்த நிலையில், அவர் புகலடைவதற்கு உரியதாகிய பூம்புகலூரை மேவிய பின்னும், திருக் கழுக்குன்றத்தின் உச்சியையும் அதில் உயர்ந்தோங் குங் கடவுளையும் நினைவோடு எண்ணி அந்த இறுதி நேரத்தில் இவ்வாறு வழுத்தும் அருமைப்பாடு பெரி தாங் கருத்தூன்றுதற் குரியது.

46. இதனாலும் கழுக்குன்றத்தில் உறையுந் தெய்வம் 'முழு முதற் கடவுள்' என்பது பெறப்படும். எனவே திருக்கழுக்குன்றம், முழு முதன்மையுடைய ஆண்ட

அடிமை கொடுநோய் பொடிகள் படவே அருணை கிரிவாழ் பெருமா
அடியேனை வலது மொழிதானொருவர் பழிவாய் மொழிவாரோ [வே

வளை அடைந்து மக்கள் உய்வதற்கேற்ற மேன்மைத் திருமலை என்பது உணர்ந்து கொள்ளப்படும்.

47. மலையுச்சியில் முழு முதற் கடவுள் விளங்குதலை யொப்ப, அக் கடவுளின் முழு முதற் சத்தியாய்த் தாழக் கோவிலில் அம்மன் திருமுன்னிலை விளங்கு கின்றது. அது, முழு முதற் சக்தி என்பதற்கு அதன் பெயரே போதிய சான்றும். ஆண்டவன் தொழி லில் முதன்மையுற்றது 'திரிபுரத் தகனம்.' அதாவது முப்புரம் எரித்தல்; அதன் கருத்து மும்மலங்களையும் நீறுக்குதல், "முப்புரமாவது மும்மல காரியம்" என்பது திருமந்திரம்; ஆதலின், 'திரிபுர தகனம்' இறையின் முழுத் தொழிலையும் தலைமை தோன்ற விளக்கும். அதன் ஆற்றல் தோன்ற 'திரிபுரசுந்தரி' என அம்பிகையின் பெயர் விளங்குகின்றது. இவ் வுண்மைக்கேற்றபடி அம்பிகை திருமுன்னிலை மிகவும் பேராற்றல் நிலையமாய்த் திருக்கழுக்குன்றத்தில் விளங்குகின்றது.

48. அம்மை பெயர், 'திரிபுரதகனி,' அல்லது 'திரிபுர வதனி' என்பனபோல் இல்லாமல் 'திரிபுரசுந்தரி' என்றிருப்பதனால், அங்கு செல்லும் அடியார்கள், அவரிற் சிறப்பாகப் பெண்பாலார், மும்மலங்களை நீக் கிக் கொள்ளுங் குண அழகுதான், உண்மையில் அழகு தருவது என்று உணர்ந்து வாழ்க்கையில் திருத்தமுறுகின்றனர்.

49. மலை ஏறுதற்கு, புதுப்பிக்கப்பெற்ற நல்ல படிக்கட்டு

திருமால் கமலப் பிரமா விழியிற் றெரியா வரனுக் கரியோனே
எரிவாய் நரகிற் புகுதா தபடிக் கிருபா தமெனக் கருள்வாயே.

இடையிடையே மண்டபங்களுடன் காட்சியளிக்கின்றது.

50. மலைமேல் ஏறியிறங்கும் படியமைப்பு, உச்சிக் கோவிலைச் சுற்றி வலம் வரும் முறையில் மாலைபோல் அமைந்திருப்பது ஒரு தனிப் பெருஞ் சிறப்பு! கோவிலுக்கு அண்மையில், சரிவிலேயே சுற்றுவது போல் உள்ளது மற்றும் ஒரு தனிப் பேரினிமையாகும். அதாவது, அடிவாரத்திலிருந்து செல்லும் படிவழி, சரிவின் நடுவிடத்திற் பிரிந்து வலமாக ஏறிப் பின் இடமாக இறங்கிப் பிரிந்த இடத்திலேயே கூடிக் கீழ் இறங்கிவிடுகின்றது. மாலையென்பது உடம்பின் விலாப் பக்கத்தைச் சுற்றி அமைவதன்று; மார்பிலிருந்து மேலேறிக் கழுத்தைச் சுற்றிக் கீழிறங்கி மார்பிலேயே ஒன்று கூடும் அமைப்புடையது. திருக்கழுக்குன்றத்தில் மலைப் படி அமைந்திருக்கும் வகை இத்தகைய மாலையமைப்பாய்ப் பொலிகின்றது. தம்மைச் சுற்றி வழிபடும் அடியார்களின் சூழலே ஆண்டவனுக்கு மாலை போலும்! தென்னாட்டு மலைக்கோவில்களில் வேறெங்கெங்குங் காணாத இத்தனிப் பேரழகு, திருக்கழுக்குன்றத்துக்கே உரியதாய்ச் சிறப்பெய்து கின்றது.

51. மலைக்கோவிலில் இறைவன் திருமுன்னிலை கிழக்கு நோக்கியது; மலைமேல் ஏறும் அன்பர்கள் இறைவனுக்கு எதிரில் ஏறி இறங்குதல் மாண்பாகாது; அது, மாறுபட்டோர் செயல்; மாறுபட்டோர் அதனால்

கரச்சூர் நெருக்கச் செருச்சூர் மலிக்கப் பொரும் வேலா
தீருந்தா வலித்துக் கலைப் போதத்தைப் புகல்வாயே.

'எதிரி' எனப்படுவர். அன்பராவோர பக்கப்புறமாய் அடக்கத்துடன் ஏறி இறங்குதல் வேண்டும். திருக்கழுக்குன்றத்தில் மலையடிவாரம் தெற்குப் பக்கமாய் அமைந்து, இச்சிறப்புக் குறியதாய்ப் படிகள் வாய்ந்து திகழ்கின்றது.

52. ஒரே பாறையில் சிற்பத்திறன் அமைந்த ஒற்றைத் தூண் திருக்கோவில், மலையில் இறங்கும் படிவழியில் காட்சியளிப்பதும் இம்மலைக்கு ஒருதனிப் பெருமை. ஒரே பாறையில் கருவறை, அதனில் இறையுரு, மண்டபம், தூண் முதலியன அமைந்த ஒரு கோவிலே உண்டாக்கியிருப்பது சிற்பக்கலைக்கே ஒரு சிறப்பு!

53. தனக்கு மேல் உயரமில்லாத உச்சியில் இறைவன் அருளிருக்கை இருத்தலும், சரிவின்வழியிடையில் ஒற்றைத்தூண் கோவிலாகிய கலையிருக்கை இருத்தலும் உரிய இடங்களில் அமைந்தனவாய் உள்ளன. கலையிலும் உயர்ந்தது அருள்! தாழ உள்ள பொருள்நிலை மக்கள், கலைக்குமேல் அருள் உயர்ந்ததென்று அறிதல் இன்றியமையாதது!

54 அருள்பெற்று, அதன் வழியாகக் கலை நிறைதல் வேண்டும்; அதுவும் பிறர்க்கு உதவும் நிலைக்கு அதற்கொருதுணைக்கருவியாகவே கலைநிலை வேண்டப்படும். மலைஏறி இறையருளில் ஒன்றியபின், தொண்டின் பொருட்டுக் கீழ் இறங்கும் இடைவழியில் கலைத் திறக் கோவில் அமைந்திருப்பது இவ்வுண்மைகளுக்குப் பொருத்தமாயுள்ளது.

நிசிசர னுறைமா கிரியிரு பிளவா நிறையயில் முடுகா விடுவோனே
சததள மலர்வாழ் புனிதனை கழலார் தரு நிழல் புகவே தருவாயே.

55. கலைச்சிறப்புகள் நிலத்தில் தாழ இருப்பது அவ்வளவு சிறப்பன்று; பொருளுலகத்தினுக்கலையுலகம் மேம்பட்டதாகலின், மலைகளில் சரிவில் இருப்பது அதன் இடைநிலைக்குப் பொருத்தமானது. மகாபலி புறத்துச் சிற்பங்கள்போல் தாழ இருப்பதினும், திருக்கழுக்குன்றத்திற்போல் இடைநிலையில் உயரமாய் இருத்தலே தக்கது.

56. மலையின் மேல் சுனைகள் உண்டு.

57. மலையின் தாழ்வாரங்களிலும் சரிவிலும் முனிவரர் இருக்கைகள் உண்டு.

58. மலை வலம் வரத்தக்கது.

59. மலை வலப் பாதை, நல்ல கற்பாதை உடையது.

60. மலை வலம் நடைக்கு அளவான வழியுடையது; விடியற்காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் யாரும் எளிதாக வலம் வரலாம்.

61. மலைவலப் பகுதிகளில் அழகிய மலைச் சாரலும், வெளியும், ஏரி, நீர்க்கால், கிணறு, குளம் முதலிய நீர்நிலைகளும், மரநிழலும், சோலையிடமும், பிறவுமாகிய இயற்கை நலன்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

62. அகவழிபாட்டுக்கு மிகவும் ஏற்ற மலைச் சாரற் பகுதிகள் பலப் பல உள்ளன. செடிகொடிகள் சூழ்ந்த பெரிய சிறிய அழகிய பாறைகளும், குகைகளும், தனிமையிடங்களும், மலைவளைவுகளும், மேலிடங்

கலப மரகத துரகத நிருபகிரி மயில் வாழ்வே
ஒரு வசனமும் இருசரணமு மறவேனே.

களும், சாரல் வகைகளும், தாழச் சோலைகளும், பூந்தோட்டங்களும், திருமடங்களும் அங்கங்கு உண்டு.

63. மலைப்பாதை, இடையிடையே ஊர்கள் அமைந்து அன்பர்களுக்கு அச்சமென்பதே தோன்றாத வகையில், மழை, காற்று முதலியவற்றிற்கும் காப்பாகும் முறையில், செயற்கை நலன்களும் பொருந்தியது. திருவிழா மண்டபங்களும் உண்டு. இரவு பகல் எந் நேரத்திலும் அன்பர்கள் வலம் வருவது வழக்கம் மலை வலத்துக்கு மிகவும் பொருத்தமான நலங்கள் பலவும் ஒருங்க அமைந்தது.

64. இச்செயற்கை நலங்கள் திருக்கழுக்குன்றத்தின் இயற்கை நலத்தை வென்று விடவில்லை. மலைப்பாதையிலும், ஊர்ப் பகுதிகளிலுங்கூட இயற்கை நலமே விஞ்சியுள்ளது.

65. மலை ஏராளமான மூலிகைகள் அமைந்தது.

66. மலை, தூய உயிர்க்காற்று வீசுவது; நோய் நீங்குஞ் 'சஞ்சீவி' மலைச் சாரல் அமைந்தது.

67. மலையின் மண்ணும் மருந்தாய்ப் பயன் படுந் தனிச் சிறப்புப் பொருந்தியது. '**மலை மருந்து**' என்று அது புகழ்பெறுகின்றது; நிறமும் சுவையும் அமைந்தது; மலைமண், உடம்பின் பூசு பொருளாகவும் உட்கொள்ளும் உள் மருந்தாகவும் உதவுகின்றது;

68. மலைமூலிகைகள் சருகுகளாய் மலை மண்ணில் விழுந்து விழுந்து மண்ணுதலால் அம் மூலிகைகளின் சாறு

அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

திறம்பி, அதனாலும் மலை மண் மருந்தாந் தன்மை பெறுகின்றது.

69. திருக்கழுக்குன்றத்து மலை முழுதுமே இயற்கை மருத்துவ நிலையம். சில காலம் அங்கே தங்கியிருத்தலொன்றே உடல் நலத்துக்கும் போதும்; உயிர் நலத்துக்கும் போதும்.

70. மலை மேல் ஏறினும் விளக்குகள், பலவாய், அணிந்து கீழிருந்து நோக்குவோர்க்கு மிக்க கவர்ச்சியும் உருக்கமும தருவனவாய் திருக்கழுக்குன்றத்திற்கு மட்டும் தனிச் சிறப்பாய்த் திகழ்கின்றன.

71. இறைவன் வான் வெளியில் தோற்றங்காட்டுவது போல், நிமிர்ந்து நோக்குவார்க்குத் திருவிளக்கணி தெய்வ உணர்வை எழுப்பவல்லன.

72. மலை வலப் பாதையில் மலையைச் சுற்றி வருதலும், மலையேறும்போது படிவழியில் ஏறி இறங்குவதாகச் சுற்றி வருதலும், உச்சியில் திருக்கோவிற் சுற்று மண்டபத்திற் சுற்றி வருதலுமான மலை வழிபாடு மும்முறை வலம் வருவதாக அமைகின்றது. தாழக்கோவிலும் இவ்வாறே மூவகைச் சுற்று நிலைகள் அமைந்துள்ளது.

73. மக்கள் உலாவுதற்கமைந்த கடற்கறை உலகமெங்கும் இருந்தாலும், சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரை மட்டும் கவர்ச்சியாய் இன்பஞ் சிறந்து விளங்குவது போல், மலையும் மலைச் சரிவும், மலைப் பாதையும் மலைச் செடி கொடிகளும், ஊர் ஓரத்து மலைத்

வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே.
இந்த்ரிய தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ.

தோற்றமும், மலையடிவாரமும், மலைப் படி வழிகளும், மலையுச்சியும், மலைக் கோவிலும், மலை விளக்குகளும், மலை வாத்தியமும் உலகிற் பற்பல காணப்பட்டாலும் திருக்கழுக்குன்றின் மலைக் காட்சிகள் மட்டும் மிக்க கவர்ச்சியும் அருளுணர்ச்சியும் விளக்குந் தலைமைத் திறத்தில் ஒருங்கே இணையற்றுத் திகழ்கின்றன.

(தொடரும்)

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

ஆறுமுக கருணை

கொல்லும் வில்லை யேந்தும் கொடியோர்; அமைதி காணார்; அமரரை நெருக்கினர்; இதனால் புண்ணிய லோகம் புலம்பி நின்றது. வானோர் பருகும் அமுதையும் பறித்த மோசமான அரிஷாதி சொருப அந்த அசுரர் தலைவன் சூரபதுமன். ஆணவ முனைப்புள அவனையும், அவனைச் சார்ந்தோரையும் சாய்த்த வீர விலாசத்தோடு ஒரு திருமுகம் விளங்குகின்றது.

...." வில்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்துடிந்து
தேவ்வர் உயிர்சிந்தும் திருமுகம்"

காணுங்கள் என்கிறார் நம் கவிவரர். அமைதியைக் குலைக்கும் சிந்தனையும், அசுர ஆட்சியும் அழிய வேண்டியது தானே என்று, நினைந்து நெகிழ்கின்றது ஆன்ம உணர்வு, இத் திருமுக தரிசனம் செய்து,

---

மறிதாவு செங்கை அரனா ரிடங்கொள் மலைமாது தந்த முருகேசா
அறிவே யழிந்து அயர்வாகி நைந்து அடியேன் மயங்கி விடலாமோ.

....' ஒருமுகம்
சேறுநர்த் தோய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகோள் நெஞ்சமோடு களம்வேட் டன்றே '

என்று கீரரும்,

' மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே '
என்று திருப்புகழ் முனிவரும் பாடிப் பணிவது, இங்கு நம் நினைவிற்கு வருகிறது அல்லவா !

அளவிலாத் தொல்லையை அளிக்கின்றது இப் பிறவி. சார்தரும் இதற்குக் காரணமா யிருக்கின்றது சஞ்சித வினை. கொடிய இந்த வினைக் கூட்டங்களை வேரறுத்து, அழியா வாழ்வை உயிர்களுக்கு அளிக்கும் இன்ப விலாசமாக இருக்கின்றது ஒரு திருமுகம்.

இதோ பாருங்கள் !

....' எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் '

என்று நாம் காணக் காட்டுகின்றார் கவிஞர்.

வினையறுக்கும் விமல முகம் என்றதும், தீரா வினை தீர்க்கும் அத் தெய்வத் திருமுகத்தை, நினையாது நினைக்கின்றது நம் நெஞ்சம். இத் திருமுகத்தைச் சேவித்த மகிழ்ச்சியால்,

' கூறும் அடியார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே '
என்று கூறிக் குதூகலிக்கின்றார் அருணை முனிவர்.

குலவு தேர்கட வச்சுதன் மருக குமாரா கச்சிப் பெருமாளே
மவுன பூசித சத்திய வடிவினை மாயா மற்குப் புகல்வாயே.

நூலறிஞர்கட் கெட்டாத நுண்பொருள்கள் பல. அவைகளை நூற்களும் எல்லையிட்டுக் கூறும். அவைகள் விளங்கினாலன்றி, அமலனை யறிய வழியில்லை. ஞான தாகம் மிக்க உயிர்கட்கு, அநுபூதியை முதற்கண் அருளி, அதன் மூலம், அந் நூற் பொருள்கள் அனைத்தையும் விளக்க வல்லவன் அருட் குரவன்.

அநுபூதியின்றி, அச் சொல்லிற்குப் பொருள் விரித்துப் பொழுது கழிக்க வேண்டா! ஆய்வார்க்குத் தெளிவு தரும் அநாதி நித்தியமான வேதங்கள், ஆக மங்கள் முதலிய அருள் நூற்களின் தேர்ச்சிபெற,

……………………………………………' சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்'

சேவிக்கும சிந்தனையில் நின்மின்கள் என்கிறார், அத் திருமுகப் பேறு கண்ட இப் புலவர் பெருந்தகை.

ஞானத் திருவுருவன், ஞான பண்டிதனாகிய திரு முருக தெய்வப் பெருமான், சிவத்திற்கே மெய்ஞ்ஞான போதம் செய்தவன் என்று புகல்கின்றது புராணம். அதற்கேற்ப, இத் திருமுக தரிசனத்தால் வேதாகம நுட்ப மெல்லாம் விளங்குகின்றது; என்னே இந்த இன்பம் !

…………………………………………' ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே'

என்று இதனைத் திறம்பட உரைக்கின்றது திருமுரு காற்றுப்படை.

அறமுறு சீகாஞ்சியி லுறை வோனே
வேதாந்த பரமசுக விடாம்பொருள் இதவிய பாதாம்புயமருள்வாயே

அறியாமையும், மறதியும், இருளும், துன்பமும் விளைவித்து, உயிர்களை யெல்லாம் இறுக்கி நெருக்கி, தன்னையும், அமலனையும் அறியாமல் தடுமாறச் செய்கிறது ஆணவ இருள். அநாதி காலம் தொட்டுப் பந்தித்த அதனை விரட்டும் ஒளி விலாசமாக உயர்ந்து மணம் செய்கின்றது ஒரு திருமுகம்.

.................................' விடுத்தகலாப்
பாசஇருள் துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் '

என்னும் கவிஞர் துணையால் அத் திருமுகத்தையும் காண்கிறோம். சூரியனது செங்கிரணங்கள் சில; சந்திரனது தண் கிரணங்கள் சில; அக்கினியின் வெங்கிரணங்கள் சில; சித் கிரணங்கள் பல; பல கோடி கிரணங்கள், இங்ஙனம் அத் திருமுகத்திலிருந்து எங்கும் பரவுகின்றன; அற்புத ஜாலம் காட்டும் அவைகளின் எதிரில், ஓடி யொளியாதோ பாழும் ஆணவம்! பல ஒளிக் கற்றைகளைப் பரப்பி, மணங் கமழும் மலர்போன்ற இத் திருமுகத்தை ஊன்றி உணர, உருகுகின்றதே நம் உள்ளம்!

'மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்'

என்று பாடும் நக்கீரர்க்கு, முதல் தரிசனமான திருமுகம் இது.

இறைவன்பால் நேசங் கண்டு, உயிர்கள் பால் ஈகை கொண்டு, முருகன் வலத்தில் அமர்ந்துளர் வள்ளியார்.

சதா இறைவன் இடத்தில் ஒன்றி சிவ போகங் கண்டவர் தேவ யானையார்.

பச்சைத் திருவுமை யிச்சித் தருளிய கச்சிப் பதி தனிலுறைவோனே
புதுமலர் சொருகிய செச்சைத் தொடையது தரவேணும்.

வள்ளியார், பேசும் மோனப் பெருந்தேவி ;
தேவ யானையார், பேசா மோனப் பெருமகள்.
அன்பும் பணியும் அமையச் செய்பவர் வள்ளியார்;
யோகமும் ஞானமும் எய்தச் செய்பவர் தேவயானையார்,

இந்த வேட்கை இருவர்க்கும் பெருகி, அதன்வழி உயிர்கள் உய்தல் வேண்டும்; ஆதலின், தம் அநுபவத்தை உயிர்கட்கு என்றும் உணர்த்தும் பொருட்டு, அவ்விருவருக்கும் மோக விலாசம் செய்கின்றது ஒரு மதிமுகம் என்கிறார், நம்முனிவர்.

நேசமுடன் போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர்-
மோகம் அளிக்கும் முகமதியும் [பூங்கொடிக்கும்

ஆஹா ! என்ன அற்புதமாக இருக்கிறது இச்செய்தி. கற்பியலை ஸ்ரீ தேவயானையாரிடம் காட்டிய ஸ்ரீ கந்தப் பெருமான், களவியலை ஸ்ரீ வள்ளி நாச்சியாரிடம் காட்டினாகலின், நேசம் கற்பைக் காட்டிற்று; போகம் களவியலைக் காட்டிற்று எனினும், அம் மதிமுகம் நோக்கி, உண்மையென்று உருகி நிற்கிறது நம் உள்ளம்.

ஊன்றி இந்த அடியை உணரநேர்ந்தபின் வள்ளிமணாளா!

"நினைவார் சித்தமொடகலா மல்புகும்
நிழலாள் பத்தினி மணவாளா"!

"செழுமுத்து மார்பின் அமுதத் தெய்வானை
திருமுக்தி மார்பின் மணவாளா"!

என்று பாடுவோம்; பரவசத்தோடு ஆடுவோம் என்னும் பத்தி சிந்தனை மிகுந்து நமக்கு இன்பக் கண்ணீர் பொங்கி எழுகின்றதல்லவா!

'ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே'

சித்ரப் புயவீரா, வெற்றிக் கொடியோனே
செச்சைக் கழல்பற்றிப் பணிவோனே

என்று, இதனை வேறு ஒரு வகையில் நயம் தோன்ற நவில் கின்றது திருமுருகாற்றுப் படை.

திருவருளைபபெறும் வேட்கையர் பலர், அதன் காரண மாக சரியையிற் சார்கின்றார்; கிரியையில் ஏறுகின்றார்; யோகத்தில் மோகம் மூளுகின்றார். இங்ஙனம் பல வழி களில் முயன்று, சண்முகப் பெருமான் திருவடிகளில் சரண்புகுகிறார்கள் ஜீவர்கள். நினைவு நிறைவேறி மகிழ் வடைய, அவர்கட்கு வரம் பல வழங்கும் ஈகை விலாசம் செய்கின்றது ஒரு திருமுகம்.

....'தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்'

பாருங்கள்! கவிஞர் பெருமானால் இத்திரு முகத்தரிசனம் நமக்குக் கைவலயமாகின்றது.

தாகததைப் பொறுத்தது, அவன் விரைந்து தருகின்ற செய்தி.

பயன் கருதி முதலில் துவக்கி, வரவர வழிபாடு வளர்ச்சி யடையும்; அதில் பிறக்கும் உணர்வு நயப்பு, மதித்த பயனை மறக்கச் செய்யும்; அங்கிருந்து நிட்காமிய ஆராதனை நிலைக்கும்; அந்நிலையில்,

"வெருமல ரதுகொடு வேண்டி யாகிலும்
ஒருமல ரிலைகொடும் ஓர்ந்து யானுனை
விதமுறு பரிவொடு வீழ்ந்துதாள் தொழ
[அருள்வயே" என்று

ஆறுமுகன் அடிமலரில் சரண்புகும் ஆன்ம உணர்வு. அடி யில் வீழ்வார்க்கு வாழ்வுதவும் அமல முருகன், அளவிலா

முட்டுப் பட்டுக் கதிதோறும் முற்றச் சுற்றிப் பல நாளும்
தட்டுப் பட்டுச் சுழ்வேனைச் சற்றுப் பற்றக் கருதாதோ.

இன்பப் பேற்றை, அந்நிலையில் உயிர்க்கு அருளுகின்றான். காமியத்தில் விழைந்தவை யனைத்தையும் நிட்காமிய வழி பாட்டில் பெற்று நெகிழ்கின்றது ஜீவன்.

அமலனது கருணையே கருணை! அவனது திருவருள் விலாசஞ் செய்யும் திருமுகங்களின் அருட்பேற்றை நினைந்து, இன்பம் பிறந்து, ஊற்றெழும் கண்ணீரால் உடல் நனைவதன்றி, அந்த அற்புதத்தை எழுதிக் காட்ட இயல்வ தில்லையே!

தழைக்க அளிக்கும் அத் தெய்வமுகத் தாமரையை

"ஒருமுகம் ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே"

என்று விநயமொடு விளம்புகிறார் நக்கீரர்.

இங்ஙனம் ஆறுமுகம் செய்த அருட்பேற்றால், அசுர ஆட்சி அழிந்து, ஊழ்வினை ஒழிந்து, வேதாகமம் விளங்கி, ஆணவம் ஒடுங்கி, இச்சை கிரியைகளால் தவம் வளர்ந்து, அமலனை யடைந்து, வரம் பல பெற்று வாழ்கின்றது புனித ஆன்மா என்று புளகித்துப் பாடுகின்றார் **குமர குருபர ஸ்வாமிகள்.**

அறுமுக சேவையும், அவைகள் செய் அருளும் அற்புதம் அற்புதமாக இருக்கிறது; பாடல் முழுவதையும் இப்பொழுது படித்துப் பாருங்கள்!

....'வில்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வர் உயிர்சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்

வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொளைசெலா
பற்றித் தவியாத பற்றைப் பெறவேனே.

ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச இருள்துரந்த பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
போகமுடன் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்'

[வெவ் அசுரர்-உக்ர வெம்மை யுடைய அசுரர்கள்; இவர்கள், தேவர்கட்கு என்றும் மாறுனவர்கள். தடிந்து - இரு கூறுக்கி, தெவ்வர் - பகைவர் - மாற்றி - ஒழித்து உலவாத - அழியாத. சூழ்வோர் - ஆய்வாளர் - வடிக்கும் - கற்றுத் தெளியும். முடிக்கும் - ஐயம் அகற்றியருளும்; விடுத்தகலா - அநாதி காலமாக விட்டு நீங்காத - பாசம்-ஆணவம் - துரந்து-துரத்தி; பல்கதிர் - பல கிரணங்கள். புத்தேளிர் பூங்கொடி - தேவ லோகப் பூங்கொடியான தேவயானையார். தாகம் - விரும்பியதைப் பெற சிந்திக்கும் ஆர்வம்.]

வாழ்க்கையில் இன்ப எறுமுகம் வேண்டுவோர், இந்த ஆறுமுக அருள் நலத்தையினிது புலனுக்கும இனிய இந்தப் பாடல் அடிகளை, உளத்தில் ஊறவைப்பது நலம்.

ஆஹா! இந்த ஆறுமுகங்களுக்கு ஏற்ப, வீறு தரும் ஆறிரு தோள்கள் செய்யும் அருள் விலாசங்களை, குமர குருபரர் காட்ட அடுத்த இதழிற் கண்டு, இன்பமே எந்நாளும் என்று இறு மாந்து நிற்பம்.

திருக்கசிப் பதிச்சொக்கப் பெருமானே.
பிறப்புப்பற் றறச் செச்சைக் கழல்தாராய்

பழனியாண்டவர் மயில்விடு தூது

(கார்த்திகை மீ தொடர்ச்சி)

T. H. விவேகாநந்தம்பிள்ளை.
(இறைபணியாளர். திருவெண்காடு தேவஸ்தானம்.)

அண்டர்கோன் திருவைத்தொண்டன் கண்டார்தல்:-

பழனியாண்டவன் திருவுலாக்காட்சியால் என் ஊனிலும், எலும்பிலும் இன்பப்பெரு வெள்ளம் பாய்ந்து, நிறைந்து, இடம் போதாமையால் வழிந்து புறத்தே பொழிந்ததுபோல் கண்ணீர் பெருகிற்று. "இன்பமயமாகிய வீட்டினை, ஆனபயபத்திவழி பாடதனால் இம்மையிலேயே அன்பர்கள் பெறுவார்கள்" என்று அருணகிரிநாதர் அருளிய திருவாக்கின் வலிமையை நான் அறிந்தேன். உடலை மறந்தேன். உயிரைமறந்தேன். வஞ்சனை செய்யும் மனத்தையும் மறந்தேன். நான் என்பதையும் மறந்தேன். எல்லாம் மறந்தேன். இந்த இன்பநிலை விரைவில் மறைந்தது கண்டு வருந்தினேன். இன்றளவும் பலகாலம் சென்றது. மீண்டும் அவ்வின்பநிலை வருமோவென்று அன்றுமுதல் இன்று வரை ஆவல் கொண்டுள்ளேன்.

அன்பன் இன்ப அனுபவம்விழைதல்:—

முருகன், ஒன்றும் அறியாத என் உள்ளத்தை நெருப்பில் இட்ட மெழுகுபோல் ஆக்கினன். என் சிந்தை மிக வருந்தியும், அவன் ஒருதடவையேனும், சிறிதுபொழுதேனும் வந்து அவ்வின்ப அனுபவம் மீண்டும் தந்திலன். என் மனத்துயரை என்னென்று சொல்லுவேன்? காதல்

மெய்வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாபா சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ.

இளங்காளை, ஒரு கன்னிக்கு மாலையிட்டு மீண்டும் அவளை நோக்காமைதகுமோ? ஆடும் பருவத்தே மாலையிட்டவன், அறியும் பருவத்தில் அருள்செய்யாமை பெருமைக்கு ஏற்றதாகுமோ? இன்னுமொருமுறை எம்பெருமான் அத்தகைய இன்பம் தருவானோ? தன்பால் ஆசையருளிய ஆண்டவன் ஆளாமல் மோசமும் செய்வானோ?

தொண்டன் தன்துயரைத் தோகைக்குரைத்தல்:—

அவன் அருளையே அல்லும் பகலும் நினைந்து பித்தனுயிருக்கின்றேன். உள்ளம் ஒடுங்கப் பெருகிலேன். உள்ளத்துள் முருகன் சேவடிகண்டு அன்பினால் வரும் இன்ப வெள்ளத்தில் மூழ்கிலேன். மாயைசெயும் துன்பப் பெருக்கிற் சுழலுகின்றேன். மகமாயை களைந்திட வல்லபிரான் முகமாறும் மொழிந்தும், மௌனசுகம் ஏன் இன்னம் எனக்கு வந்தபாடில்லை? வல்வினையின் கொடுமை தீர்ந்தபாடில்லை. உள்ளம் தேறவில்லை. மகளிர் விழிவலையினின்று தாண்டவில்லை. பொன்னாசை குறையவில்லை. **வீடு**, வயல், என்ற ஆசைப்பைசாசம் நீங்கவில்லை. நீசரைப் பின்பற்றும் நினைப்பு நீங்கவில்லை. எனது, யான், என்னும் மயக்கம் தீரவில்லை. பலநூலிற் சிக்குப்பட்ட அறிவு விடுபடவில்லை. அடியேன் இவ்வாறோ ஆவது? வேலவன் சேவடிக்கு அன்புவைத்தவரையும் தீவினைகள் வருத்துமெனில் உய்வார் இனி யார்? முருகன் என் உள்ளத்தே வாராமல் இருக்கவும், கருணைக்கண் பாராமல் இருக்கவும், திருவடி மலரென்றலையில் சூடாதிருக்கவும் எனக்கும் அவனுக்கும் ஏதேனும் பெருவழக்குண்டோ? முன்பு

காலனுடல் போடத் தேடிவரு நாவிற்
காலைமற வாமற் புகல்வேனோ.

அவன், அரனார் நெற்றிக்கண் பொறியிலுதித்தான். நீள் கவலை ஓங்கும் சிறைஉற்ற என் உள்ளத்தாமரையிலுதியான். வீங்கு புனற்கங்கைக்கு மகன்முறைமை யுடையோன், நாயேன் அகம்கைக்கும் (வெறுப்புறும்) தன்மையை ஒழித்திலன். (மனச்சஞ்சலத்தை நீக்கவில்லை) அழகிய கமலப் பொய்கை பொறுக்கப் பொருந்தியிருந்தான். அடியேன் பொய்கை பொறுக்கப் பொருந்திடான். வன்கை (வல்+நகம்=வலிமையுடையமலை) மேன்மைக் கோயில் மன்னினன். என் அகமாகியகல்லைக் கோயிலாக்கொண்டிலான், அன்னைவளைக்க, கந்தவடிவானான். என் நெஞ்சவளைக்குள் கந்தாகிவாரான். சிறையில் கிடந்த சயந்தனைச் சொப்பனத்திலே தேற்றினவன் என்பால் சொப்பனத்திலேன் வரவில்லை? தந்தை மகிழ ஒரு மொழி சொன்னவன் என் சிந்தை மகிழ ஏன் ஒரு மொழியேனும் சொல்லவில்லை? அலைகடல் வற்ற வேல் விட்டவன் என் கவலைக் கடல் வற்ற ஏன் மனம வைக்கவில்லை? மலையின் நெஞ்சம் பிளந்து சிறை நீக்கினவன் என் வினையின் வஞ்சம் பிளந்து ஏன் என் பிறவிச் சிறையினின்று என்னை நீக்கிலன்? தஞ்சம் அடைந்த என்னை அஞ்சல் என்னாததனால் கவலையுற்றேன்.

ஐயனருள்வனென்றடியான்தேறல்:—

முன்பு ஒருகால் தேவர்களை வதைத்து, மீண்டும் உயிர்ஈந்து, தன் விசுவரூபம் காட்டித் தன் உண்மையை உணர்த்தியவன் எனக்கும் அவ்வாறு உண்மை உணர்த்தானோ? அச்சுதற்குச் (திருமால்) செம்மேனி தந்தளித்த

இறைவற் கேட்கத்த குஞ்சொல் உடையோனே
தெவியமோ கூத்தை யென்ற அருள்வாயே

செவ்வேள், என் மாசழித்து இம்மையிலே எனக்கும் செம்மை தரமாட்டானே? தீயோர்கள் பாசத்திற் சிக்கி னரை மீட்டோன் என் தீய வினைச் சிக்கைச் சிதையானே? பாண்டியனுடைய நோயை நீக்கிக் கூனை நிமிர்த்தியவன் என் பிறவி நோயையும் பாசக் கூனையும் நீக்கானே? முன் ஒருத்தியின் (முருகம்மையார்) துயரை நீக்கிக் கை தந்த வன் என் துயரை நீக்கிக் கை தர மாட்டானோ? வணிகன் உளத் துயரை மாற்றியவன் பணிவோனது உளத்துயரை மாற்றானோ? வெந்த எலும்பைப் பெண்ணாக்கியவன் என் வெந்த மனத்தைத் தேற்றானோ? என்பு இழை பொறுத்தருளும் இறைவன் மகன் என் பிழையைப் பொறுத்தருள இசையானோ?

அடியார் பிழை பாராதவன் எனவும், தமிழால் வைதாரையும் வாழ்த்தும் வள்ளல் எனவும், ஏழைக் கிரங்கும் என் அப்பன் எனவும், மோழைமை நீக்கும் முதல்வன் எனவும், புலவர்க்கு உசரத் துணை எனவும், கலங்தோரைக் காத்தருள்வான் எனவும், ஒருகால் 'முருகா, என்பார் சென்னியின்மேல் இருகாலும் வைத்தருள்வான் எனவும், கலியுக வரதன் கந்தன் எனவும், துன்பத்தில் நம்மையவன் கைவிடமாட்டான் எனவும் நம்பி, பெரியோர் ஒருவரைப் புகலடைந்து அவர்பால் என் குறை கூறி ஆண்டவன்பால் தூது விடுக்கத் துணிந்தேன்.

எல்லையில் பேரானந்தவீடு மவனுக்கருள் புரிக
ஆனந்தரூப முருகையனே—ஞானமிலாச்
சந்தேசித்தே யோஞ்சதாசிவமே யென் றுரைத்துச்
சித்தேசனல் லருளைச்சேர்ப்பிக்கச்—சித்திரநீள்

தின்னை யுணர்ந்துரு கிப்போற் பதமக் கழல் சேர்வார்
தங்கு புரத்தினி லென்னையு மன்போடு வைக்கச் சற்றுக் கருதாதோ

தோகைக்குடை விரித்துத்தோமில் நிழல் பரப்பிப்
பாகுமொழியன்னையர்கள்பக்கமுற — வாகைபுனை

ஞானவடிவேல் வலக்கை நண்ணமுரு கேசனைப்
பானல்வாய் ஞானம்பரிமளிக்கும்—

மோனபரம குருநாதனைப் பண்ணவர்தம் கோவை
வரதனை மெய்யன்பர் தமைவாழ்த்தும்—...........

சோதியில்வேலருட்பழனியாண்டவனை யென்பால்
மயிலேவிரைந் தழைத்துவா (தொடரும்)

மூவகை நஷ்டம்

தென்னிந்தியாவில் அண்ணாமலை எனும் திவ்ய க்ஷேத்திரத்தில் சமாதி நிஷ்டையில் நின்று ஸ்ரீரமணாஸ்ரமத்தில் உலகம் பரந்த மக்களுக்கு தத்வ போதத்தை உபதேசித்து வந்த பகவான் ஸ்ரீ ரமண ரிஷி முதலில் மறைந்தார் இது ஒரு பெரும் நஷ்டம். பிறகு ஸ்ரீ அருணகிரியார் இயற்றிய திருப்புகழை தமிழ்நாடெங்கும் இன்னிசையால் பரப்பி முருக பக்தியும் தமிழ் மணமும் எங்கும் நிறைந்திருக்கும் படி தன் வாழ்நாட்களை தத்தம் செய்த பெருந்தவப் புருஷர் ஸ்ரீவள்ளிமலை ஸ்வாமிகள் மறைந்தார். பிறகு புதுச்சேரியில் ஸ்ரீ அரவிந்தோ அவர்களும் மறைந்தார். பாலியவயதில் ஸ்வராஜ்யப் போர் துடக்கி ஆங்கில அரசாட்சியை வேரற அசைத்துக் காட்டி பிறகு புதுச்சேரியில் ஆஸ்ரமம் கொண்டு

மயிலேறி யன்று நொடிபோதி லண்டமு வலமாக வந்த குமரேசா
அறிவே யழிந்து அயர்வாகி நைந்து அடியேன் மயங்கி விடலாமோ

பெருந்தவம் இயற்றியவர் அரபிந்தோ அவர்கள். இம் முச்சுடரும் மறைந்தாலும், அவர்கள் உபதேசமும் தவமும் மக்கள் மனதிற்கு ஊக்கத்தைக் கொடுத்து நல்வழிப் படுத்துமென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீவைஷ்ணவர் செல்வம்

18-ஆம்பை

V. S. வேங்கடராமன்

'அகன்' மலைப்பாம்பு ஆவி துறந்தது

பிருந்தாவனத்தில் கண்ணபிரானோடு கூடச் சென் ஆயச்சிறுவர் பலவித விளையாட்டில் ஈடுபட்டுப் பிரமாநந்தத்தை அடைந்தனர்.

கீழோர்க்குப் பிறரின்பமுறப் பார்க்கும்போது பொறாமைதானே

அகன் என்ற பெயர்கொண்ட அசுரன், கண்ணபிரானது லீலைகளைப் பார்த்துப் பொறாமை கொண்டான். அசுரனியல்பு இவ்வாறாகத், தேவர்கள், கண்ணனது விளையாடல்களை நினைப்பதாலேயே ஜீவிதம் பலனுற்றதாகுமென்றெண்ணியிருந்தனர். என்னே வேறுபாடு. கம்ஸனது கட்டளை ஒரு புறம். பூதனையும், பகனும் ஆகிய தம்முடன் பிறந்தாரை இழந்ததுன்பம் ஒரு புறம். பொறாமை வேறு ஒரு புறம். இம்மூன்றுங்கூடிவிட அவன், பலராமரோடு கண்ணனை நாசஞ்செய்யப் போகிறேன் என்று தீர்

மாவைக் குத்திக் கைத் நற ஏற்றிப் பொரும் வேளா
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும்.

மானித்துக்கொண்டு எட்டுமைல் நீளத்திற்கு ஒரு மலைப் பாம்பு வடிவங் கொண்டான். வாய் குகைதான். கீழுதடு பூமி மட்டத்தில் படிந்திருந்தது. மேலுதடு மேகமண்டலத்தை எட்டிற்று, கடைவாய்கள் குகைகளைப் போலிருந்தன. தத்திப் பற்களோ மலைச்சிகரங்கள் போலிருந்தன. வாயின் உட்பாகமோ இருட்டாயிருந்தது. நாக்கு விரிந்த வழிபோல இருந்தது.

மாய மலைப்பாம்பு

மூச்சுக் காற்று கடுங்காற்றுப் போலிருந்தது. காட்டுத்தீப்போலக் கண்கள் கனன்றெரிந்தன. அம்மலைப் பாம்பின் வாயைப் பார்த்த அவ்விடைச் சிறுவர் “மலைக்குகை தானிது. ஒருவேளை மலைப்பாம்பின் வாயாக இருந்தால் கண்ணனால் இது கொல்லப் படும்” என்று பேசிக் கொண்டும், கண்ணன் முகத்தைப்பார்த்துக் கொண்டும் சிரித்துக்கொண்டும், கைகளைக் கொட்டிக்கொண்டும், அப்பாம்பின் வாயினுள் நுழைந்தனர். அவர்களோடு மேய வந்த கன்றுகளும் நுழைந்தன. இவ்வளவும் பகவான் அறிவதற்குள் ஆகிவிட்டன. அந்தப் பாம்பு வாயை மூடவில்லை. கண்ணன், தன் வாய்க்குள் நுழையவில்லையே என்று பாம்பு எதிர்பார்த்தது. கண்ணன், தோழரையும் கன்றுகளையுங் காப்பாற்ற அப்பாம்பின் வாயில் நுழைந்தார். தேவர்கள் ஓவென்று கதறினர். கம்ஸன் முதலியவர் மகிழ்ந்தனர். கண்ணனைப் பொடியாக்க அம் மலைப் பாம்பு எண்ணியது. கண்ணனே அப்பாம்பின் வாயி

எல்லோரும் மதிமயங்கல்

னுள்ளே தொண்டையில் நின்றுகொண்டே மிக விரைவாகத்தன்னுடம்பைப் பெருக்கினுர்.

பாம்பின் ஆவிஒளி கண்ணனிடம் புகுதல்

பாம்புக்குத் தொண்டை அடைத்தது, கண்கள் வெளியேபிதுங்கின. அப்பாம்பின்உயிர்வெளியே போனது. பாம்பின் வாய்க்குள் நுழைந்து செத்த கன்றுகள் உயிர் பெற்றுத் துள்ளி வெளியே ஓடிவர, இறந்த அத்தோழரும், உயிர் பெற்று எழுந்து ஓடி வந்தனர். தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது, கண்ணன் பாம்பின் வாயினின்று வெளியே வந்ததும், அப்பாம்பின் ஆவி அதிசயப் பேர் ஒளி கண்ணபிரானிடம் பிரவேசித்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். வானர மங்கையர் ஆடினர் பாடினர். ஸ்தோத்திர-வாத்திய முழக்கங்களைக் கேட்டதும், பிரமதேவன் வேத மோதுவதை நிறுத்திவிட்டு, வெளியேவந்து எம்பிரானது பெருமையைக் கண்டு வியந்தான்.

அப்பாம்பின் தோல் நெடுநாள் வரையிலும் விளையாடுஞ் சிறுமலைபோல் அவ்விடையர்களுக்குப் பயன் பட்டது. கண்ணன், தங்களை யமன் வாயிலிருந்து மீட்ட கருணையை அத்தோழர்கள், நெடு நாள்வரையிலும், அப்பொழுது நடந்த அதிசயம் போல் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தனர். அப்பாதகனும் கண்ணனின் திருவருளால் மோக்ஷமடைந்தான்.

THE HOLY QUEST

No observer, when he found a wonderful production, ever abstained from enquiring whose was the marvellous mind that executed. Even so the Tamil Saints set about the holy quest who the author of creation was and where He may be found. The mightiest and subtlest in creation only whetted their interest in the search. Added to this was the glory of Motion which in its turn yielded Time and Life. Where from came the energy behind the creation, where is its resting place, 'what is life' and 'who am I', these and other innumerable queries filled their mind. 'What is pleasure', 'what is pain', 'what is death' and 'what the object of life may be"–these questions pressed for an answer. The sense of curiosity of man set on foot the Holy Quest. With some, realisations were called religion and philosophy; and with others the results were denominated Science. But, Science and Religion are twin sisters and their disclosures only glorify the work of God. Happy is the man who can see the Lord in His Works; for to him the Lord reveals Himself in his heart. The ego of the limited man there merges into the Infinity of the Devine attribute. The Great *Thayumanavar* addresses the Lord Himself for an answer as to where He is. (10th song of Sukhavari. 'Where art Thou to be found? Oh, Lord'. Art Thou seated at the topmost point of the Cosmic Globe? Or Art Thou within the mightier Globe that encompasses the Cosmic? Is the centre of the Sun Thy resting place? Art Thou the inside of Fire? Dost

Thou reside where the moon emits its life-giving rays of nector.' Art thou to be found in the consecrated *idols* as the devotees approach them with melting hearts to make obeisance with blossoming flowers; Art, Thou at the end of the directions ? (East, West, North and South). Is the Eternal Void Thy Abode? Art Thou at the Fatherhood and Motherhood of creation? Can Vedanta and Siddhanta discover Thee ? Art Thou in the many things that are seen or in the State of Soonya which is said to be beyond all sight ? Does triune Tune provide thy residence? Art Thou *to be found in the Birth of things or* Art Thou *in* the Company of thy Bhaktas ? Vouchsafe unto me Thy Abode, O Thou Eternal Spirit of Joy and Light, O My Lord *God* beyond all *qualifications of* immaculate purity.

Thiruppugal Mani

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

நமது குரு வயா
I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், தடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 ப்ரேமலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சீசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் பில்லேயும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியரால் தபால் மூலம் சிகிச்சை பெறவும்

ஸோல் ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54. பந்தர் தெரு :: மதராஸ்.1

பற்றற்றார் பற்றாகப்
பற்றி யிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி
கூடியிருந்தாண்டி

(பட்டினத்தார்)

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.

Tel:—"FAITH' Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18